வழங்குவதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மேற்கண்ட கருத்து எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு இரண்டு பெரிய மானியங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். (குறுக்கீடுகள்) 12 உறுப்பினர்கள் பேச வேண்டும். எல்லோரும் கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத் தொடர் தொடங்கிய நாளிலிருந்து பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துறைக்கு எல்லாவற்றையும் பதிலுக்காக அனுப்பி இருக்கிறோம். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நான்கு நாட்கள் ஆகின்றன. சபை ஆரம்பித்து நான்கு, ஐந்து நாட்கள்தான் ஆகின்றன. துறையிலேயிருந்து இன்னும் பதில் வரவில்லை. வந்தவுடனே ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, வந்தவுடனே*

2014 ஜூலை 17] [பேரவைத் தலைவர்]

ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன கிருஷ்ணசாமி, சொல்லுங்கள்.

முற்பகல் 11–20

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். பதில் வரட்டும் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்பொழுதுதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்குத்தான் நீங்கள் கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு 10½ மணிக்குத்தான் நீங்கள் கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பதில் வரவில்லை. வந்தவுடன் நான் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பதில் வர வர வரிசையாக நான் எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) பதில்கள் வர வர நான் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) ஒரே நாளில் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் ஒரே நாளில் எடுத்துக்கொள்ள முடியாது. ஆதலால் ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பதில் வரவில்லை. பதில் வந்ததும் நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் தலைவருக்கு ஏற்கெனவே அனுமதி கொடுத்துவிட்டேன். அவர் பதிலை கேட்டுவிட்டு உட்கார்ந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பாலகிருஷ்ணன் சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் இன்னும் பதில் வரவில்லை. பதில் வந்தவுடன் எடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனது அறையிலேயே ஏற்கெனவே உங்களிடம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அதை நீங்கள் raise செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 17

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்) இது முறையில்லை. (குறுக்கீடுகள்) எனது அனுமதி இல்லாமல் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் என் அறையில் வந்து கேளுங்கள். அனுமதியில்லாமல் இவற்றையெல்லாம் அவையில் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) திரு. சந்திரகுமார் இதையெல்லாம் எழுப்ப முடியாது. எனது அறையில் வந்து கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் எனது அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் கேட்கக்கூடாது. இதெல்லாம் பேரவைத் தலைவரின் அதிகாரம். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு இருக்கின்ற அதிகாரத்தை நீங்கள் question செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் கேட்டதற்கு எனது அறையிலேயே பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) வேறு என்ன வேண்டும் உங்களுக்கு? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. மு. அருண் சுப்பிரமணியன், திரு. செ. அருண் பாண்டியன், திருமதி ஆர். சாந்தி, திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. தமிழழகன், திரு. க. பாண்டியராஜன், திரு. சி. மைக்கேல் ராயப்பன் ஆகியோரைத் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)